14.11.2016

தினமலர்

ரூ.169



ஆட்டுக்கறி விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த தீபாவளிக்கு வெள்ளாட்டுக்கறி கிலோ 650 ரூபாய், செம்மறி ஆட்டுக்கறி கிலோ 550 ரூபாயை எட்டியது. கறி விலை பண்டிகை காலங்களில் ஏறு முகத்துடன் நிலை பெற்றுவிடுகிறது. விலை குறைய வாய்ப்பே இல்லை. மாமிச பிரியர்கள் அதிகரித்து வருவதால், ஆட்டுக்கறிக்கு மவுசு குறையாது.'கொட்டில் வளர்ப்பு' முறையில் ஆடு வளர்ப்பு நிலைத்த வருவாயை ஈட்டித் தருகிறது. மதுரை மாவட்டம் தும்பைப்பட்டி அருகே பரமநாதபுரம் கிராமம் ஆடு வளர்ப்புக்கு பெயர் பெற்று வருகிறது. விவசாயி பாண்டிசெல்வம் 'எஸ்.கே.இ.' என்ற பெயரில் ஆட்டுப்பண்ணை நடத்தி வருகிறார். கொட்டில் முறையில் வெள்ளாடு, செம்மறி ஆடுகளை வளர்க்கிறார். இரவில் மட்டும் ஆடுகள் கொட்டிலில் அடைக்கப்படுகின்றன. பகலில் மேய்ச்சலுக்கு அனுப்புகிறார். கொட்டில் முறையில் தீவனம் ஒரே மாதிரியாக இருக்கும். ஆடுகளை மேய்ச்சலுக்கு விடுவதால் அனைத்து வகையான சத்துக்களும் ஆடுகளுக்கு இயற்கை உணவாக கிடைக்கிறது.

கிலோ ரூ.169: இப்பண்ணையில் வெள்ளாடு கிலோ 200 ரூபாய். செம்மறி ஆடு 169 ரூபாய். 6 முதல் 7 கிலோ எடையுள்ள குட்டி முதல் 50 கிலோ எடையுள்ள பெரிய ஆடு வரை எடை போட்டு கொள்முதல் செய்யலாம். விலையில் பேரம் பேசவும், புரோக்கர்களுக்கும் இடமில்லை. நேரடியாக பண்ணைக்கு வந்து ஆடுகளை தேர்வு செய்து உடனுக்குடன் வாங்கி செல்லலாம். வியாபாரிகள், ஆட்டுப்பண்ணை நடத்துவோர், சொந்த தேவைக்கு என வாங்கி செல்கின்றனர். வெளிமாநிலம், வெளிநாடுகளுக்கும் ஆடுகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சென்னைக்கு மட்டும் உரித்த முழு ஆடுகள் 400 எண்ணிக்கையில் ஏஜன்ட்கள் மூலம் தினமும் ரயிலில் அனுப்பப்படுகிறது.

மாலத்தீவு 'மச்சான்': பண்ணை உரிமையாளர் பாண்டிசெல்வம் கூறியதாவது: தினமும் காலை, மாலை இரு வேளை மேய்ச்சலுக்கு அனுப்புகிறோம். ஆடுகளுக்காக பண்ணை வளாகத்தில் ஊட்டச்சத்து மிகுந்த 'கோ 4' ரக புல் வளர்க்கப்படுகிறது. 1,500 ஆடுகளை கொட்டிலில் அடைக்க மெகா ெஷட் அமைக்கப்பட்டுள்ளது. கழிச்சல், காய்ச்சலுக்கு கால்நடை மருத்துவர் சிகிச்சை அளிக்கிறார். மாலத்தீவு, சிங்கப்பூர், மலேஷியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து நேரடியாக பண்ணைக்கு வந்து ஆடுகளை கொள்முதல் செய்கின்றனர். மாலத்தீவுக்காரர்களை 'மாலத்தீவு மச்சான்' என வியாபாரிகள் அழைக்கின்றனர். சராசரி வருமானம் மாதம் 50 ஆயிரம் ரூபாய் என்றார். ஆடு தேவைக்கு 99527 80260ல் ஹலோ சொல்லலாம்.
**- கா.சுப்பிரமணியன், மதுரை**

## அவரை கள் பலவிதம்: ஒவ்வொன்றும் ஒரு விதம்

**''பறவைகள் பல விதம்...**
ஒவ்வொன்றும் ஒருவிதம்...'' என்ற பாடல் வரிகள் போல் அவரையிலும் பல ரகங்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனிச்சுவை உண்டு. அதிலும் திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை அவரையின் ருசி அலாதியானது. காபி செடிகளில் ஊடுபயிராக அவரை சாகுபடி நடக்கிறது. சிறுமலை பொன்னுருவியை சேர்ந்த

மலைவாழ் விவசாயி மஞ்சம்மாள் தனது காபி தோட்டத்தில் அவரையை ஊடுபயிராக சாகுபடி செய்து லாபம் ஈட்டுகிறார். அவர் கூறியதாவது: சிறுமலையில் விளைவிக்கப்படும் அவரை ரகங்கள் ஜமுனாபாரி ஆடுகளின் காதுகள் போல் நீளமாகவும், சதைப்பிடிப்பு அதிகமாகவும் இருக்கும். பொறியல், அவியல், சாம்பாரில் கலந்து சமைத்தால் சுவை நன்றாக இருக்கும். கோழி, பெல்ட், நைஸ் பெல்ட் என மூன்று வித அவரைகள் சிறுமலையில் விளைகிறது. காபி செடிகளின் நடுவே பத்து அடிக்கு ஒரு குழி வீதம் 300 குழிகளில் அவரை சாகுபடி செய்கிறேன். கார்த்திகையில் நடவு செய்து பங்குனியில் காய்கள் எடுக்கலாம். தொடர்ந்து ஆறு மாதம் காய்ப்பு இருக்கும். சீசன் நேரங்களில் கிலோ 50 ரூபாய் வரை விலை போகும். திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு அனுப்புகிறோம். அங்கிருந்து வியாபாரிகள் அனுப்புகின்றனர் என்றார்.



## விதை கிலோ ரூ.500



திண்டுக்கல் மாவட்டம் மைக்கேல்பாளையத்தை சேர்ந்த அவரை விதை வியாபாரி செல்வராஜ் கூறியதாவது: அவரை சீசன் துவங்கும்போது சிறுமலைக்கு கோழி, பெல்ட், நைஸ் பெல்ட் ரக அவரை விதைகளை விற்கிறேன். விவசாயிகள் ஆர்வமாக வாங்கி செல்கின்றனர். விதை கிலோ 500 ரூபாய். நாட்டு அவரை ரகங்கள் சிறுமலை மண்ணில் அருமையாக வளர்கின்றன. குறைந்த நீர் போதும். பனிப்பொழிவிலும் நன்றாக வளரும் என்றார்.

## 'பிரதமர் பயிர் காப்பீடு திட்டம்'



(பி.எம்.எப்.பி.ஒய்.) என்பது இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளின் போது விவசாயிகளுக்கு தக்க நேரத்தில் நிதி வழங்கி

உதவுவது. தவிர விவசாயத்தில் நிலை பெற செய்தல். நவீன வேளாண் தொழில் நுட்பங்களை கடைபிடிக்க விவசாயிகளை ஊக்குவித்தல். கடன் உதவி தொடர்ந்து கிடைப்பதை உறுதிபடுத்துதல். வேளாண் வளர்ச்சியை மேம்படுத்துதல் போன்றவையாகும். பயிர் கடன் பெறும் விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிர் கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரில் சேர்த்து கொள்ளப்படுவர். இதற்காக மத்திய அரசு 600 கோடி ரூபாய், மாநில அரசு 160 கோடி ரூபாய் என மொத்தம் 760 ரூபாய் ஒதுக்கி உள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளை இணைக்க மாவட்டம் தோறும் வட்டார அளவில் 'அக்ரி இன்சூரன்ஸ் கம்பெனி' தொடர்பு அலுவலர்களை நியமித்துள்ளது.விபரங்களுக்கு வட்டார வேளாண் அலுவலர்களை அணுகலாம்.

**பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகள் விண்ணப்பிக்க அழைப்பு**



பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர, தேனி மாவட்டத்தில் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மாவட்டத்தில் நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விண்ணப்பிக்கலாம்.

பருவநிலை மாற்றம் மற்றும் மழையில்லாததால் பயிர் சாகுபடி செய்ய இயலாத நிலை, விதைப்பில் இருந்து அறுவடை வரை பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பு, மகசூல் இழப்பு, இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பாதிப்பு ஆகியவற்றுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு வழங்கப்படும்.

பயிர் காப்பீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், ஆண்டிபட்டி பகுதியில் 94425- 82695, கடமலைக்குண்டு பகுதியில் 97876-66483, பெரியகுளம் பகுதியில் 94420- 93682, தேனி வட்டாரத்தில் 98941-65388, கம்பம் பகுதியில் 97887-83833, உத்தமபாளையம் பகுதியில் 96556-75404, சின்னமனூர் பகுதியில் 89390-73799, போடி பகுதியில் 94425-65452 ஆகிய எண்களில் வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு நேரில் சென்றும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஊத்தங்கரை பகுதிகளில் மாங்காய் விளைச்சல் அமோகம்**



ஊத்தங்கரையை அடுத்த சாலமரத்துப்பட்டி அருகே நிகழாண்டு பருவமாற்று முறையில் விளைவிக்கப்பட்ட மாங்காய் விளைச்சல் அதிகரித்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஊத்தங்கரை சுற்றுவட்டாரப் பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன. இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பருவமுறை மாறிகாய்ப்பு திட்டம் குறித்து பல்வேறு பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது இந்தப் பகுதியில் உள்ள சுமார் 300 விவசாயிகளின் முயற்சியால் மாந்தோட்டத்தில் பெங்களூரா, நீலம், செந்தூரா, காதர், அல்போன்ஸா உள்ளிட்ட ரகங்கள் பருவம் மாறி காய்க்கும் முறையில் அதிக அளவில் காய்த்துள்ளன. இதுகுறித்து பகுதி விவசாயிகள் கூறியதாவது: மே, ஜூன் மாதங்களில் காய்க்கும் மாங்காய்கள் பழச்சாறு நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதால் கிலோவுக்கு ரூ. 4 முதல் 10 வரை கிடைக்கும். அதில் போதிய லாபம் கிடைப்பதில்லை. ஆனால், தற்போது இந்தப் பருவமாற்று முறையில் விளைவிக்கப்படும் மாங்காய்கள் கிலோ ரூ.40 முதல் 100 வரை விற்கப்படுவதால் அதிக லாபம் கிடைக்கிறது. மேலும் இங்கிருந்து மாங்காய்கள் அதிகளவில் வட மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தமிழகத்திலேயே செப்டம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை சுமார் 2,500 டன் மாங்காய் விளைச்சல் கொண்ட பகுதி இங்குதான் உள்ளது என பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் த.நா.பாலமோகன் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இயற்கைமுறை காய்கறிகளின் விற்பனைக்கு தனிக் கடை ஒதுக்கப்படுமா?- சிறு, குறு விவசாயிகள் எதிர்பார்ப்பு



கேரள மாநிலம், கண்ணூரில் இயற்கை காய்கறிகளை ஆர்வமாக வாங்கும் பொதுமக்கள். | (கோப்புப் படம்)

தமிழகத்தில் 60 லட்சத்து 32 ஆயிரத்து 718 ஹெக்டேரில் விவ சாயம் நடைபெறுகிறது. இதில், 52 லட்சத்து 43 ஆயிரத்து 839 ஹெக்டேரில் ஒருபோக சாகுபடியும், 7 லட்சத்து 88 ஆயிரத்து 879 ஹெக்டேரில் இருபோக சாகுபடியும் செய்யப்படுகிறது. இதில், 42 ஆயிரம் ஹெக்டேரில் மட்டுமே விவசாயிகள் இயற்கை முறையை கடைபிடிக்கின்றனர்.

மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் விளைவிக்கப்படும் 50 சதவீத காய்கறி, பழங்கள், மலர்கள் விற்பனை கேரளாவைச் சார்ந்தே இருக்கிறது. 2014-ம் ஆண்டு கேரள அரசு, வெளி மாநிலங்களில் இருந்து விற்ப னைக்கு வந்த காய்கறிகளை ஆய்வு செய்தபோது, தமிழக காய்கறிகளில் அளவுக்கு மீறிய நச்சுத்தன்மை இருப்பதாகத் தெரிவித்தது. தமிழக வேளாண் துறை, நச்சுத்தன்மை கட்டுக்குள் இருப்பதாக தெரிவித் தும் முன்புபோல் தமிழக காய் கறிகளுக்கு கேரளாவில் வரவேற்பு இல்லை.

கேரள அரசு, காய்கறி தேவையை சமாளிக்க 2015-ம் ஆண்டு புதிய வேளாண் கொள்கையை அறிவித்தது. வெளிமாநில காய்கறி கள் வரத்தைக் குறைத்து, அனைத்து மாவட்டங்களிலும் வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம் அமைப்பதற்கு சிறப்பு மானியங்கள் வழங்கி காய்கறி சந்தைகளில் 40 சதவீத கடைகளை இயற்கையில் விளைந்த விளைபொருட்கள் விற்பனைக்கு ஒதுக்கீடு செய்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இயற்கை வேளாண் பொருட்களின் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் ஆரோக்கியம், சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை அரசே ஏற்படுத்துவதால் தற்போது இயற்கை காய்கறிகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

தமிழக அரசும் மானிய உதவியில் இடுபொருட்கள் வழங்கி இயற்கை விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஆனால், மக்களிடம் இயற்கை காய்கறிகள் பற்றிய விழிப்புணர்வு இன்னும் இல்லாததாலும், அரசு நேரடி சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காததாலும் இயற்கை முறையில் விளைவித்த காய்கறி கள், பழங்களை விற்க முடியாமல் சிறு, குறு விவசாயிகள் தடுமாறு கின்றனர்.

இதுகுறித்து மதுரை கட்டையன்பட்டி தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத் தலைவர் சுப்பையா கூறியதாவது:

மதுரை மாவட்டத்தில் தற்போது வெண்டை, சீனி அவரைக்காய், தக்காளி, முட்டைகோஸ், கத்தரிக் காய், தேங்காய் மற்றும் பழ வகைகள் இயற்கை முறையில் சாகுபடி செய்யும் பரப்பு அதிகரித்துள்ளது. ஆனால், வெளிநாடுகள், அண்டை மாநிலங்களைப் போல சந்தைப் படுத்த வாய்ப்புகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்காததால் வியாபாரிகளையே நம்பியிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள், ரசாயன உரம் கொண்டு விளைவிக்கப்படும் காய்கறிகளுக்கான விலையையே இயற்கை காய்கறிகள், பழங்க ளுக்கும் கேட்கின்றனர்.

ரசாயன உரத்தைக்கொண்டு விளைவிக்கும் காய்கறிகளை ஒப்பிடும்போது, இயற்கை முறை யில் மூன்றில் ஒரு பங்குதான் விளைச்சல் கிடைப்பதால், அவர்கள் கேட்கும் விலையில் விற்றால் நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், பெரும் நிறுவனங்களுடன் வர்த்தக தொடர்பு இருக்கும் பெரு விவசாயி கள் மட்டுமே இயற்கை விவசாயத் தில் சாதித்து வருகின்றனர். சிறு, குறு இயற்கை விவசாயிகள், விளைவித்த பொருட்களைச் சந்தைப்படுத்த முடியவில்லை. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி சந்தைகள், உழவர் சந்தைகளில் இயற்கை காய்கறிகள், பழங்கள் விற்பனைக்கு தனிக் கடைகள் ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கினால் பொதுமக்களிடம் இயற்கை காய்கறிகள், பழங்க ளுக்கு வரவேற்பு கிடைக்கும் என்றார்.